# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை. 6

**முன்னிலை: முனைவர் ச.கண்ணப்பன்**

**ந.க. எண் : 50553 /எம்/இ1//2019 நாள் : 13.3.2020**

பொருள் : பள்ளிக் கல்வி – மாணவர்கள் உடல் ஆரோக்கியத்துடனும் இருக்க கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்திட மாணவர்கள் சோப்பினால் கை கழுவுதல் குறித்த அறிவுரைகள் – சார்பு

பார்வை:

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 011328/எம்/இ1/2020 நாள்.9.3.20
2. உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், குறளகம், சென்னை கடித எண். 1152/அ3/2020 நாள்.11.3.20

************

பார்வைக் கடிதத்தில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தல் குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்துவகை பள்ளி மாணவர்களுக்கும் அறிவுரைகள் வழங்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் மாணவர்கள் தங்கள் கைகளை சோப்பு பயன்படுத்தி கழுவுதல் குறித்து தெரிவிக்கப்பட்டது. எனவே மாணவர்கள் கை கழுவ அறிவுரை வழங்கிடவும், மேற்பார்வையிடவும் ஆசிரியர்களை அறிவுறுத்த அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்கள் பள்ளி வேளையின் போது தங்கள் கைகளை கழுவ ஏதுவாக அவர்களுக்கு தேவையான சோப்புகளை பள்ளியின் சிறப்பு நிதியில் இருந்தோ அல்லது பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் இருந்தோ வாங்கி வழங்கிட தலைமையாசிரியர்களை அறிவுறுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாணவர்கள் அவ்வப்போது சோப்பினால் கை கழுவுவதால் காரணமாக அவர்களது உடல் நல்ல ஆரோக்கியத்துடனும் இருக்கும் என மாணவர்களுக்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்கண்ட அறிவுரைகளை அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி வட்டார கல்வி அலுவலர்கள் பள்ளி பார்வையின் போது மாணவர்கள் சோப்பினால் கை கழுவும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டார்களா என கண்காணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பள்ளிக் கல்வி இயக்குநர்**

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல் : பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் : ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
நகல்: தொடக்கக் கல்வி இயக்குநர்,தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.